## தேசிய பாதுகாப்பு நிதியம் - 2015

தேசிய பாதுகாப்பு நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1985 இன் 09 ஆம் இலக்க தேசிய பாதுகாப்பு நிதிய அதிகாரச்சட்டத்தின் 12(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளிற்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)ஏ பிரிவின் பிரகாரம், ஒரு விபரமான அறிக்கை அமைச்சின் செயலாளருக்கு காலக்கிரமத்தில் வழங்கப்படும்.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை தேசிய பாதுகாப்பு நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 01

நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் என்பவற்றின் பொறுப்பு தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை மற்றும் நிதிப்பிரமாணம் 502(2) இன் பிரகாரம் ரூபா 17,037,875 தொகையான நிலையான சொத்துக்கள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் நிதி விளைவு ரூபா 48,440,571 மிகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 66,075,563 ஆக இருந்தமையால், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 17,634,992 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. முதலீட்டு வட்டி வருமானம் ரூபா 15,120,606 ஆல் குறைவடைந்தமை மற்றும் நலன்புரிச் செலவினம் ரூபா 2,527,015 ஆல் அதிகரித்தமை என்பன மேற்படி நிதி விளைவுகளின் வீழ்ச்சிக்கு பிரதான காரணங்களாக இருந்தன.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2011 ஆம் ஆண்டின் ரூபா 86,634,147 தொகையான மிகையானது 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 57,510,514 வரை வீழ்ச்சியடைந்திருந்தது. அது 2013 ஆம் ஆண்டில் ரூபா 80,688,937 வரை அதிகரித்திருந்த போதிலும், 2014 ஆம் ஆண்டில் ரூபா 66,075,563 தொகையாகவும் மீளாய்வாண்டளவில் ரூபா 48,440,571 தொகையாகவும் படிப்படியாக வீழ்ச்சிடைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1985 இன் 09 ஆம் இலக்க தேசிய பாதுகாப்பு நிதிய அதிகாரச்சட்டத்தின் 9 ஆம் பிரிவின் பிரகாரம் தமது உத்தியோகபூர்வ கடமைகளை நிறைவேற்றுகையில் காயங்களுக்கு உள்ளாகும் அல்லது மரணமடையும் பொலிஸ் அதிரடிப்படை அல்லது தரைப் படையினரின் அல்லது எவரேனும் அங்கத்தவர்களின் குடும்பங்களுக்கு ஏதாவது நலன்களை வழங்குவது அடங்கலான தேசிய பாதுகாப்பை முன்னேற்றுவதற்காக மற்றும் அதனை உறுதிப்படுத்துதற்கு பெருமளவு காரணமாக அமைவதாக நிதியத்தின் ஆளுநர் சபை

கருதும் விதத்தில் மற்றும் அவ்வாறான விடயங்களுக்கு நிதியத்திற்குச் சொந்தமான பணத்தை சனாதிபதியின் பணிப்புரைகளுக்கு இணங்கப் பயன்படுத்துதல் நிதியத்தின் ஆளுநர் சபையினது பிரதான செயற்பாடாகவுள்ளது. மீளாய்வாண்டில் மேற்குறித்த நோக்கத்தை நிறைவேற்றுவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிதியத்தால் வருடாந்தம் உழைக்கப்படும் வருமானம் உரிய நோக்கங்களிற்காக பயன்படுத்துவது மிகவும் பலவீனமான நிலைமையொன்றில் இருந்தமை பின்வரும் தரவுகளின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது.

| ஆண்டு | பெறப்பட்ட வருமானம் | நலன்புரிச் செலவினம் | பெறப்பட்ட வருமானத்தில் நலன்புரிச் செலவினத்திற்காக செலவிடப்பட்ட சதவீதம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | % |
| 2015 | 54,842,601 | 6,214,506 | 11.33 |
| 2014 | 69,967,787 | 3,698,843 | 5.29 |
| 2013 | 84,776,544 | 3,892,332 | 4.59 |
| 2012 | 64,988,177 | 7,273,184 | 11.19 |
| 2011 | 49,082,045 | 32,250 | 0.06 |

(ஆ) கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்றுள்ள தகவல்களின் பிரகாரம் யுத்தத்தினால் மரணித்த மற்றும் காணாமல் போன முப்படைக்குரிய அங்கத்தவர்களின் எண்ணிக்கை 25,273 ஆகவும் வலது குறைந்த வீரர்களின் எண்ணிக்கை 18,942 ஆகவும் இருந்த போதிலும், மீளாய்வாண்டில் அக்குடும்பங்களில் 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் சித்தியடைந்த 230 பிள்ளைகளுக்கு ரூபா 5,750,000 பெறுமதியான சேமிப்பு வைப்புக்களை வழங்குதல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் யுத்தத்தினால் வலது குறைந்த, மரணித்த மற்றும் காணாமல் உத்தியோகத்தர்களின் குடும்பங்களுக்கு மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மாத்திரம் நிவாரணம் வழங்குதல் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், முழு அங்கத்தவர்களுக்காக முறையான நிவாரண வேலைத்திட்டமொன்றை ஏற்படுத்தி அவர்களுக்கு நிவராணம் வழங்குவதற்காக ஏனைய மாற்று நடைமுறைகள் தொடர்பில் நிதியத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தரைப் படையின் பயன்பாட்டிற்காக வாடகைக்கு வழங்கப்பட்ட நிதியத்திற்குச் சொந்தமான 03 வீடுகளுக்கு 2012 திசெம்பர் மாதம் முதல் 2015 ஆம் ஆண்டின் இறுதி வரையிலான காலப்பகுதிக்கான ரூபா 1,110,000 கூட்டுத்தொகையான வீட்டு வாடகையை 2016 ஆகஸ்ட் 18 ஆந் திகதியளவிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் இது தொடர்பாக தரைப்படையினருடன் குத்தகை உடன்படிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டமைக்கு முறையான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) தேசிய பாதுகாப்பு நிதியத்திற்கு 1987 ஆம் ஆண்டின் போது நன்கொடையாக கிடைக்கப்பெற்றிருந்த தற்போது ஜனாதிபதி செயலகத்தில் வைப்புச் செய்யப்பட்டிருக்கும் கண்ணாடி மேவுகையொன்றுடன் கூடிய இரத்தினக்கற்கள் ஒட்டப்பட்ட கிரீடம் ரூபா 2,890,415 பெறுமதியானதென தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபையின் உத்தியோகத்தர்களுடன்கூடிய கணிப்பீட்டுச் சபையொன்று மூலம் மீளாய்வாண்டின் போது விலை மதிப்பிடப்பட்டிருந்தது. இரத்தினக்கற்களின் நிறை 1417.9 கரட் என குறிப்பிட்டு இதில் மாணிக்கம்,

மரகதம், வைடூரியம், பச்சை மாணிக்கம், நீல மாணிக்கம் போன்ற 11 இரத்தினக்கல் வகைகளைக் கொண்டுள்ளதாக மதிப்பீட்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்றாறாயினும் கண்ணாடி மேவுகை காரணமாக குறித்த இரத்தினக்கற்களின் தன்மையை உறுதிப்படுத்துவதற்கு முடியாமல் இயற்கையான இரத்தினக்கற்கள் என கருதி குறித்த அண்ணளவான மதிப்பீடு வழங்கப்பட்டுள்ளதாக மேலும் அவதானிக்கப்பட்டது.

(இ) உரிய அங்கத்தவர்களை ஒன்று திரட்டுவதில் உள்ள சிக்கலான நிலைமை காரணமாக கூட்டங்களை நடாத்த முடியாதிருந்ததாக நிதியத்தின் செயலாளரினால் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. இவ்வாறான நிலைமையொன்றின் கீழ் நிதியத்தின் செயற்பாடுகளை செயற்படுத்துவது மற்றும் முக்கியமான தீர்மானங்களை எடுப்பது தொடர்பில் அது தாக்கமளித்திருந்ததாக அவதானிக்கப்பட்டது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2002 மே 24 ஆந் திகதிய பீஎப்/பீஈ 21 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 04 மாதங்கள் தாமதத்தித்து 2016 யூன் 29 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 4.1(இ) பிரிவின் பிரகாரம் அங்கீகரீக்கப்பட்ட பாதீடொன்று இல்லாமல் குறித்த நிதியாண்டின் போது எந்தவொரு செலவினத்தையும் மேற்கொள்ளக் கூடாத போதிலும், நிதியத்தினால் அதற்கு முரணாக மீளாய்வாண்டின் போது ரூபா 6,237,606 தொகை செலவிடப்பட்டிருந்தது.

### 5.3 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் நிதியத்தின் அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு இலக்கிடப்பட்ட செயற்பாடுகளை உள்ளடக்கி வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது அமைச்சின் செயலாளரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன.